**எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் கொடுக்கல் வாங்கல் அறிக்கை - 2024**

---

எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின 154 (6) பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற கம்பனியின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பது தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்

2018 இன் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்க இயலுமானவாறு தமது வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்களை மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்வது அவசியமாகின்றன.

அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காட்டப்பட முடியுமானவாறான கால எல்லையினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அச் சட்டத்தின் 38(1) (ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்திற்துள் தயாரிக்க நேரிடுவதாக உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்தின் உரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 இலக்க கம்பனி சட்டத்தில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.1 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலையான தன்மை

கம்பனியினால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 திகதியிலான நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| **உருப்படி**<br>**சொத்துக்கள்** | **பெறுமதி**<br>**ரூபா** |
|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 1,700,148,750 |
| நடைமுறை சொத்துக்கள் | 286,562,970 |
| மொத்த சொத்துக்கள் | 1,986,711,720 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 189,783,327 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 834,464,205 |
| மொத்த பொறுப்புக்கள் | 1,024,247,532 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 962,464,187 |
| மொத்த வருமானம் | 758,109,440 |
| மொத்த செலவு | (427,159,794) |
| மிகை | 330,949,646 |

**2.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதி இலக்கம் பீ.ஈ.டீ. 01/2021 சுற்றறிக்கைக்கு இணங்க விநியோகித்துள்ள அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 பந்தி பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்கள் செல்ல முன்னர் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றிற்கு முகம்கொடுக்க நேரிட்ட தவிர்க்க முடியாத காரணத்தின் மீது 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளிற்குரிய இறுதி நிதிக்கூற்றுக்களை உரிய திகதிக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியவில்லை. எனினும் தற்போது 2022 ஆண்டின் கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவு செய்துள்ளதுடன் அதன் கணக்காய்வு அறிக்கையும் 2024 இற்குரிய கொடுக்கல் வாங்கல் அறிக்கையும் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் 2025 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் 2023 மற்றும் 2024 கணக்கு அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் வரைவு வருடாந்த அறிக்கை உரிய திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க ஒழுங்கான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதுடன் உரிய திகதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்காத தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டம் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

| | சட்டம் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பரிந்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 46 இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் II பகுதியின் | தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் தவணை தொகையை செலுத்த கமபனியினால் | ஏற்றுக் கொள்கிறேன். கம்பனியில் ஆரம்பம் முதல் நிலவும் குறைவான காசுப் | நிதியதிச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் செலுத்த வேண்டிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | 16 (1) பிரிவு மற்றும் 1958 இன் 15 இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 மற்றும் 16 பிரிவுகள் | நடவடிக்கை எடுத்திருக்காததால் மிகை அறவீட்டுத் தொகையுடன் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 2,645,276 வையும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 236,781,312 வையும், தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு (ESPS) ரூபா 12,338,852 வை மற்றும் இலங்கை பெறுந்தோட்டதாரர்களின் சேமலாப நிதியத்திற்கு (CPPS) ரூபா 19,747,642 உமாக கூட்டுத் தொகை ரூபா 271,513,082 இனை 2024 ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டியதாக இருந்தது. | பாய்ச்சலின் காரணமாக ஊழியர் நியதிச் சட்ட கொடுப்பனவுகளை உரியவாறு மற்றும் முறையாக தீர்ப்பதற்கு இயலாதுள்ளது. 2020 முதல் இதுவரை ரூபா 370 மில்லியனிலும் அதிக தொகையை நியதிச் நிதிய தீர்ப்பனவிற்காக கம்பனியின் நிதியினால் வழங்கு செயற்பாடுகள் ஊடாக செலுத்தியுள்ளது. செலுத்த வேண்டிய மொத்த நிலுவை தொகையான ரூபா 530 மில்லியனிற்கு கிட்டிய தொகையை வரிசை அமைச்சு மற்றும் பொது திறைசேரியின் தலையீட்டின் மீது 2026 ஆண்டில் செலுத்த நடவடிக்கை எடுத்து வருவதென. | பங்களிப்புத் தொகையை உரியவாறு தீர்க்க ஒழுங்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்துக் கொள்ள வேண்டியதுடன் ஒழுங்கான விசாரணை ஒன்றை நடாத்தி மிகை அறவீட்டுத் தொகையை செலுத்துவது தொடர்பாக பொறுப்பான தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டத்தின் 02 ஆம் பகுதியின் 5(1) பிரிவு | ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் போது அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் ஊழியரிற்று உரித்தான பணிக்கொடையை செலுத்த வேண்டிய போதும் கம்பனியினால் அதன் பிரகாரம் உரிய திகதிக்கு செலுத்ததாத காரணத்தால் 2024 திசெம்பர் 31 திகதிக்கு மிகை அறவீட்டுடன் ரூபா 290,751,806 தொகையை செலுத்த வேண்டியதாக இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். கம்பனியில் ஆரம்பம் முதல் நிலவும் குறைவான காசுப் பாய்ச்சலின் காரணமாக ஊழியர் நியதிச் சட்ட கொடுப்பனவுகளை உரியவாறு மற்றும் முறையாக தீர்ப்பதற்கு இயலாதுள்ளதாகவும் வரிசை அமைச்சு மற்றும் பொது திறைசேரியின் தலையீட்டின் மீது 2026 ஆண்டில் செலுத்த நடவடிக்கை எடுத்து வருவதென. | - மேற்படி - |

(இ) திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (I) | 2016 ஒக்டோபர் 27 திகதிய இலக்கம் PED 01/2015(i) கொண்ட சுற்றறக்கை | முகாமையாயளர் (மனிதவளம்) மற்றும் விற்பனை முகாமையாளர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களிற்கு போக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகளை பெற்றுக் கொள்ள உரித்தற்ற போதும் நிறுவனத்தினால் அவர்களிற்கு 2013 ஆண்டு முதல் 2024 திசெம்பர் மாதம் வரையான காலத்தினுள் ரூபா 7,151,613 ஆன போக்குவரத்து படிகளும், 2013 ஆண்டு முதல் 2024 திசெம்பர் மாதம் வரை ரூபா 3,185,015 ஆன எரிபொருள் செலவுமாக கூட்டுத் தொகை ரூபா 10,336,628 வழங்கப்பட்டிருந்தது. | போக்குவரத்து வசதிகள் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களிற்கு பணிப்பாளர் சபை தீர்மானத்தினால் கடமை தேவைப்பாட்டின் மீது வழங்கியுள்ள போதும் இந்த வசதிகளை தொடர்ந்தும் வழங்குவது தொடர்பாக தேவையான அறிவுரைகளை மற்றும் அங்கீகாரத்தை கோரி வரிசை அமைச்சிற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளெதன. | சுற்றறிக்கை பிரகாரம் படிகளை செலுத்த வேண்டியதுடன் திறைசேரி மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரை மீது துரித நடவடிக்கைள எடுக்க வேண்டும். |
| (II) | 2022 சனவரி 14 திகதிய இலக்கம் PED/01/2015 (ii) கொண்ட சுற்றறிக்கை | தவிசாளரிற்கு அட்டவணைப்படுத்திய வாகனமொன்றை பெற்றுக் கொள்ளும் உரிமை காணப்படும் போதும், 2023 மே 29 திகதி 2024 ஒக்டோபர் மாதம் வரை நிறுவனத்தின் இரண்டு வாகனங்களை தவிசாளரின் பயன்பாட்டிற்கு ஒதுக்கிக் கொண்டு 2023 ஜுன் மாதம் முதல் 2024 ஜுன் மாதம் வரை மோட்டார் வாகன திருத்தம் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 3,978,542 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2024 நவம்பர் 01 திகதி | கம்பனிக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட வாகன தொகுதியிலிருந்து தவிசாளரிற்கு ஏற்கனவே கார் வண்டி ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது. அந்த தொகுதியிலிருந்து தொகுதி வாகனமொன்றாக ஒதுக்கியுள்ள ஜீப் வண்டி தோட்ட அவதானிப்பு நடவடிக்கைகளிற்காக மற்றும் ஏனைய அவசர போக்கு வரத்து தேவைப்பாட்டிற்காக பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையற்ற பாவனை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முதல் 2025 மே மாதம் து. வரை நியமிக்கப்பட்டிருந்த தவிசாளரிற்கும் இரண்டு வாகனங்கள் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தன. | | |
| (III) | 2022 சனவரி 14 திகதிய இலக்கம் PED 01/2015(ii) கொண்ட சுற்றறிக்கை | | | |
| (i) | | முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) உத்தியோகத்தரிற்கு ஒதுக்கிய வாகனம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் உரித்தற்ற போதும் அந்த ஏற்பாடுகளிற்கு மாற்றமாக 2023 மே மாதம் முதல் 2024 திசெம்பர் 31 வரை ரூபா 1,135,472 தொகை எரிபொருளிற்காக் மீள் நிரப்பப்பட்டிருந்தது. | - மேற்படி - | சுற்றறிக்கை பிரகாரம் படிகளை செலுத்த வேண்டியதுடன் முறையற்றதாக கொடுப்பனவு செய்தமை தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | | உள்ளக கணக்காய்வாளரிற்கு அட்டவணைப்படுத்திய வாகனமொன்றை பெற்றுக் கொள்ள உரித்தற்ற போதும், அவர் நிறுவனத்தின் தொகுதி வாகனமொன்றை தனிப்பட்ட பாவனைக்கு எடுத்து 2020 பெப்ரவரி மாதம் முதல் 2024 திசெம்பர் வரை ரூபா 662,655 தொகையை எரிபொருள் செலவாகவும் கம்பனியின் வாகனம் விபத்துக்குள்ளானதால் அவரின் தனிப்பட்ட வாகனத்திற்காக 2022 ஆகஸ்ட் முதல் 2024 திசெம்பர் முதல் ரூபா 1,215,918 ஆன | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எரிபொருள் செலவுமாக கூட்டுத் தொகை ரூபா 1,878,573 எரிபொருள் செலவாக மீள்நிரப்பப்பட்டிருந்தது. | | |
| (iii) | | உதவி கணக்காளர் (நிதி உத்தியோகத்தர்) பதவிக்கு உரித்தற்ற ரூபா 15,000 ஆன போக்குவரத்து படிகளையும் மற்றும் லீற்றர் 100 ஆன எரிபொருள் படிகளையும் சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு மாற்றமாக அங்கீகரித்து 2023 சனவரி முதல் 2024 திசெம்பர் மாதம் வரை ரூபா 841,800 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | நிதி உத்தியோகத்தர் (Finance Officer ) பதவிக்கு இதுவரை செலுத்தியுள்ள போக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகள் தற்போதைய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மீது 2025 ஒக்டோபர் மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளன. | - மேற்படி - |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (I) | நிதிப்பிரமாணம் 137 | சேவைகள், வேலைகள் அல்லது வழங்கல்கள் பூர்த்தி செய்யப்படும் போது அது தொடர்பான உரிமையை பொறுப்பெற்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கும் உத்தியோக்கத்தரினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதும் ரூபா 1,109,827 பெறுமதியான 08 கொடுப்பனவு வவுசர்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்காத போதும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன். இந்த குறைபாடுகளை எதிர்காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அங்கீகரிக்காது கொடுப்பனவு செய்த உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (II) | நிதிப்பிரமாணம் 138 | வவுசர் உறுதிப்படுத்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் வவுசர் பத்திரங்கள் உறுதி செய்யப்பட வேண்டிய | ஏற்றுக் கொள்கிறேன். இந்த குறைபாடுகளை எதிர்காலத்தில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதெனை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வவுசர்களை உறுதிப்படுத்தாது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும் கம்பனியினால் 2024 ஆகஸ்ட் 16 திகதி ரூபா 1,500,000 பெறுமதியான வவுசர் பத்திரமொன்றை உறுதி செய்யாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | கொடுப்பனவு செய்த உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (III) | நிதிப்பிரமாணம் 387 | காசோலைகள் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளிற்காக தமது வங்கி மீதி போதியதாகவுள்ளதா என செலுத்தும் உத்தியோகத்தரினால் திநமும் சரிபார்க்க வேண்டியதுடன் அவ்வாறே எந்த அரச வங்கிக் கணக்கிலிருந்தும் மேலதிக பற்று வசதியை பெற்றுக் கொள்வது தடையான போதும் பெறுந்தோட்டக் கம்பனி 2024 திசெம்பர் 31 திகதியன்ற இலங்கை வங்கி கணக்கொன்றில் இருந்து ரூபா 37,086,565 ஆன வங்கி மேலதிக பற்று வசதியை பெற்றிருந்தது. | நிதி நெருக்கடி மற்றும் அவசர தேவைகளிற்கு இந்த நிலையான மேலதிக பற்று வசதியூடாக பணம் செலுத்தியுள்ள போதும் தற்போதைய பணிப்பாளர் சபையின் அறிவுரை மீது இந்த நிலையான வங்கி மேலதிக பற்றை 2025 மே மாதம் அளவில் தீர்த்து நிறைவு செய்துள்ளதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு முரணாக செயற்பட்ட உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (IV) | 2015 ஜுலை 14 திகதிய இலக்கம் 03/2015 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையினால் திருத்திய நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) பிரிவு | கம்பனியினால் பேணிச் செல்லப்படும் முற்பண பதிவேட்டை 2025 மார்ச் மாதத்தின் பின்னர் பராமரித்திருக்காததுடன் 2024 சனவரி முதல் 2025 மார்ச் வரை பேணிச் சென்றிருந்த முற்பண பதிவேட்டையும் நாளாதுவரையாக பராமரித்திருக்கவில்லை. மேலும் முற்பண பதிவேட்டை பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கு உட்படுத்தியிருக்கவில்லை. முற்பணத்தை தீர்க்கும் போது வவுசர்கள் சமர்ப்பிக்கப்படாததால் | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது அந்த பதிவேட்டை நானாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் செயற்பட்டு பதிவேடுகளை நாளாதுவரையாக்க வேண்டியதாகவும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத முறபண தீர்ப்பனவு வவுசர்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தீர்ப்பனவு உண்மை தன்மை தொடர்பாகவும் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை. | | |
| (V) | நிதிப்பிரமாணம் 454(i) மற்றும் நிதிப்பிரமாணம் 752 மற்றும் நிதிப்பிரமாணம் 754 | பிரமாணம் பிரகாரம் பண்டக பதிவேட்டு புத்தகமொன்றை அனைத்து அலுவலகத்திலும் பொது 44 ஆம் படிவத்தில் பேணிச் செல்ல வேண்டியதுடன் அரசாங்க ஆதனங்களின் மற்றும் பண்டங்களின் அனைத்து பொருட்களையும் பொறுப்பேற்றல் மற்றும் விநியோகித்தல் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட வேண்டிய போதும் நிறுவனத்தின் பண்டக பதிவேட்டை நாளாதுவரையாக பேணி இருக்கவில்லை. ஒவ்வொறு நிதியாண்டு இறுதியிலும் பண்டக பதிவேட்டை சமப்படுத்த வேண்டிய போதும் இந்த பண்டக புத்தகத்தை சமப்படுத்தி இருக்கவில்லை. | பொருட் பதிவேட்டு புத்தகமொன்றை (STOCK BOOK) தற்போது நாளாதுவரையாக பேணிச் செல்லப்படுவதென. | நிதிப்பிரமானம் பிரகாரம் செயற்படவும், பதிவேடுகளை நாளாதுவரையாக பேணிச் செல்லவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அவ்வாறு செய்யாத உத்தியோகத்தரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (VI) | நிதிப்பிரமாணம் 756 | கம்பனிக்குரிய 05 பிரிவுகளில் 2024 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகள் கணக்காய்வு திகதிய 2025 செப்டம்பர் 03 ஆம் திகதி வரையும் நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளினதும் (கொழுப்பு அலுவலகம் தவிர) பண்டக கணிப்பீட்டு அறிக்கை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் காலரீதியாக நடவடிக்கை எடுக்க வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (உ) | 2015 ஜூன் 17 திகதிய இலக்கம் PED/3/2015 கொண்ட நிதி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை - 2.14 | குறித்த நிறுவனத்தின் தவிசாளரினால் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) பதவியையும் வகிக்கும் போது அவரிற்கு பெற்றுக் கொள்ள | 2022 ஆண்டு முதல் 2024 ஒக்டோபர் மாதம் வரை பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் எனும் பதவிக்காக மாதாந்தம் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைகேடாக மேற்கொண்டுள்ள கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| மற்றும் 2.5 பந்திகள் | முடியுமாவது ஒரு பதவியின் படிகளை மாத்திரம் எனவும், ஒரே நிறுவனத்தில் தான் நிரந்தர பதவியில் இருந்து கொண்டு வேறொறு பதவியில் கடமை மேவுகை செய்யும் போது மேலதிக கொடுபனவை செய்ய முடியாதென சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதும் தவிசாளரிற்கு பிரதான நிறைவேற்று பதவியில் பதிற்கடமைக்காக 2022 சனவரி 01 திகதி முதல் 2024 ஒக்டோபர் மாதத்திற்காக ரூபா 3,400,000 ஆன படிகள் நிறுவனத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்ட ரூபா 100,000 தொகை படியை புதிய பணிப்பாளர் சபையினால் இரத்துச் செய்துள்ளது. இவவாறு உரிய அங்கீகாரமின்றி பெற்றுள்ள இந்த படி தொடர்பாக இலஞ்சம் அல்லது மோசடி முறைபாடுகள் புலனாய்வு சபைக்கும் முறைப்பாடொன்றை சமர்ப்பித்துள்ளதென. | தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் மதிப்பீட்டு தேயிலை அறுவடை 2023 ஆண்டில் கிலோ கிராம் 2,684,566 ஆனதுடன் உண்மையான தேயிலை அறுவடை அதன் 63 சதவீதம் அதாவது கிலோ கிராம் 1,685,131 ஆனது. 2024 ஆண்டில் கிலோ கிராம் 2,499,800 ஆன மதிப்பீட்டு தேயிலை அறுவடையின் உண்மையான தேயிலை அறுவடையாக கிலோ கிராம் 1,780,247 அதாவது 71 சதவீதம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் மதிப்பீட்டு தேயிலை அறுவடையை அடைந்து கொள்ள கம்பனிக்கு இயலாதிருந்தது. மேலும், 2023 இற்கு ஒப்பாக 2024 உற்பத்தி மதிப்பீடும் கிலோ கிராம் 184,766 இனால் குறைத்து தயாரிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டு முதல் 2024 முதல் அறையாண்டு வரை சந்தையில் காணப்பட்ட அதிக இரசாயன பசளை பற்றாக்குறை காரணமாக மதிப்பிடப்பட்ட பசளையை களத்திற்கு செலுத்த முடியாதமை, 2020 ஆண்டு முதல் இரசாயன களை கொல்லிகளை பாவிப்பதனை தடை செய்ததன் மீது களத்தில் களைகளை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதன் மீது இந்தத் துறைகளில் கொழுந்துளை பரிப்பதற்கு ஊழியர்கள் தயங்கியமை, பசளை பயன்பாடு நடைமுறை சாத்தியமற்றமை மற்றும் களைகளை அகற்ற தொழிலாளர்களை ஈடுபடுத்துவதும் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமற்றதால் எதிர்பார்த்த அறுவடையை பெற்றுக் கொள்ள கடினமானகவுள்ளது.<br>கம்பனியில் தற்போது காணப்படும் தேயிலை பயிர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் | தேயிலை பயிர்களின் வயதுப் பகுப்பாய்வு பிரகாரம் நிலையான பயிர்களை பேணிச் செல்ல வேலைத் திட்டமொன்றை தயாரித்து தேயிலை கொழுந்து அறுவடையை அதிகரித்துக் கொள்ள முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்த வேண்டியதுடன் இலக்கு வைக்கப்பட்ட அறுவடை வருடாந்தம் குறைவடைவதற்கு பதிலாக அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பனியிடம் காணப்படும் உற்பத்தித் திறன் குறைந்த மிகவும் பழைய தேயிலை பயிர்களின் சதவீதம் 90% யை விஞ்சுவதால் இந்த காரணங்களும் எதிர்பார்த்த தேயிலை அறுவடையை பெற்றுக் கொள்ள தடையாகவுள்ளது. தற்போது காணப்படும் 63% சதவீத அளவான விதை தேயிலை பயிர்களை அகற்றி மீள் பயிரிடுவதற்கான பொருத்தமான காலம் வந்துள்ள போதும் கம்பனியில் காணப்படும் செயற்படு மூலதன பற்றாக்குறை மற்றும் முதலீட்டு நலன்களை அடைந்து கொள்ள 06 ஆண்டுகளிற்கு அதிக காலம் எடுப்பதனால் கம்பனிக்கு சொந்தமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நீண்ட கால மூலதன முதலீடுகளிற்கு ஒதுக்கிக் கொள்வது கடினமாகவுள்ளதென. | |
| (ஆ) | தேயிலை கொழுந்து ஒரு கிலோவின் உற்பத்தி கிரயம் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் அனைத்து தோட்டங்களிலும் அதிகரித்திருந்ததுடன் எல்கழுவ பெறுந் தோட்டத்தில் அது ரூபா 42 இனால் அதாவது 27 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டிலும், தேயிலை கொழுந்து ஒரு கிலோவின் உற்பத்தி கிரயம் செலகம் பெறுந் தோட்டம் தவிர ஏனைய அனைத்து பெறுந் தோட்டங்களிலும் அதிகரித்திருந்ததுடன் எல்கடுவ பெறுந்தோட்டத்தில் அது ரூபா 81 இனால் அதாவது 41 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் எதிர்பார்த்த தேயிலை அறுவடை 30% இலும் அதிக அளவால் குறைந்ததன் மீது பெறுந் தோட்டங்களில் நிலையான பொது செயற்பாட்டு கிரயம் அதிகரித்தமை மொத்த உற்பத்தி கிரயம் அதிகரிக்க முக்கிய தாக்கம் செலுத்தியுள்ளது. அவ்வாறே, 2024 ஆகஸ்ட் மாதம் முதல் தொழிலாளர் சம்பளம் ரூபா 1350 வரை அதிகரித்தமையும் அதனுடன் தொடர்பான நியதிச் சட்ட கொடுப்பனவுகளில் ஒப்பீட்டு ரீதியான அதிகரிப்பும் கம்பனியின் உற்பத்தி கிரயம் அதிகரிக்க முக்கிய காரணமாகவுள்ளதென. | தேயிலை பயிர்களை உரியவாறு முகாமைத்துவம் செய்வதனூடாக தேயிலை கொழுந்து அறுவடையை அதிகரிக்க மற்றும் கிரயத்தை குறைத்துக் கொள்ள வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |
| (இ) | 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் அனைத்து பெறுந் தோட்டங்களிலும் தேயிலை ஒரு கிலோவின் சராசரி விற்பனை விலை ரூபா 16 இற்கும் ரூபா | கடந்த ஆண்டுகளிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் எதிர்பார்த்த தேயிலை அறுவடை 30% சதவீதத்திற்கும் அதிக அளவால் குறைந்ததன் மீது பெறுந் தோட்டங்களில் நிலையான பொது | முறையான முகாமைத்துவத்தின் கீழ் தரத்தை அதிகரித்துக் கொண்டு தேயிலை கொழுந்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | 29 இற்கும் இடையிலான அளவால் அதிகரித்திருந்த போதும், பிட்டகந்த பெறுந் தோட்டம் தவிர ஏனைய பெறுந் தோட்டங்களிலும் உற்பத்தி கிரயம், சராசரி விற்பனை விலையை விட அதிகரித்தமை ரூபா 2 இற்கும் ரூபா 24 இற்கும் இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. 2024 ஆண்டில் செலகம பெறுந் தோட்டம் தவிர ஏனைய அனைத்து பெறுந் தோட்டங்களிலும் விற்பனை விலையில் குறைவு அவதானிக்கப்பட்ட போதும், அந்த பெறுந் தோட்டங்களின் உற்பத்தி கிரயம், சராசரி விற்பனை விலையை விட அதிகரித்தமை ரூபா 28 இற்கும் ரூபா 111 இற்கும் இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. | செயற்பாட்டு கிரயம் அதிகரித்தமை மொத்த உற்பத்தி கிரயம் அதிகரிக்க முக்கிய தாக்கம் செலுத்தியுள்ளது. அவ்வாறே, 2024 ஆகஸ்ட் மாதம் முதல் தொழிலாளர் சம்பளம் ரூபா 1350.00 வரை அதிகரித்தமையும் அதனுடன் தொடர்பான நியதிச் சட்ட கொடுப்பனவுகளில் ஒப்பீட்டு ரீதியான அதிகரிப்பும் கம்பனியின் உற்பத்தி கிரயம் அதிகரிக்க முக்கிய காரணமாகவுள்ளதென. | சிறந்த விலையை பேணிச் செல்ல ஒழுங்கான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் 2023 மற்றும் 2024 ஆண்டுகளின் மதிப்பீட்டு இறப்பர் உற்பத்திக்கு ஒப்பாக உண்மையான இறப்பர் உற்பத்தி முறையே 26 சதவீதத்தால் மற்றும் 16 சதவீத்ததால் குறைந்திருந்தது. 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் கம்பனியின் உண்மையாக இறப்பர் உற்பத்தி கிலோ கிராம் 15,554 இனால் அதாவ 14 சதவீதத்தாலும் 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் கிலோ கிராம் 9,527 இனால் அதாவது 09 சதவீதத்தால் குறைந்திருந்தது. | கம்பனியில் தற்போது காணப்படும் இறப்பர் பயிர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் இறப்பர் பயிர்களின் 73% சதவீதம் உற்பத்தித்திறன் அற்ற ஆயட்காலம் 60 வயதைவிட பழைய இறப்பர் பயிர்களாவதுடன் உற்பத்தித்திறன் உடைய ஒட்டு இறப்பர் பயிர்களின் சதவீதம் 27% அளவான குறைந்த பெறுமானமாக உள்ளது. ஒரு ஹெக்டயாரிற்கு அங்கீரிக்கப்பட்ட இறப்பர் பால் அறுவடையை அடைந்து கொள்ளவெனில், ஆயட்காலம் வயது 60 இலும் பழைய விதை இறப்பர் பயிர்களை அகற்றி மீள் பயிரிடுதல் அத்தியவசியமான போதும் கம்பனியில் காணப்படும் செயற்படு மூலதன பற்றாக்குறை மற்றும் முதலீட்டு நலன்களை அடைந்து கொள்ள 08 ஆண்டுகளிற்கு அதிக காலம் செல்வதால் கம்பனியிடம் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நீண்டகால மூலதன முதலீட்டிற்காக ஒதுக்கி வைப்பதற்கு கடினமாகவுள்ளது. | இறப்பர் பயிரின் வயது பகுப்பாய்வின் பிரகாரம் நிலையான பயிர்களை பேணிச் செல்லும் வேலைத் திட்டமொன்றை தயாரித்து உற்பத்தித்திறன் அதிக புதிய இறப்பர் பயிர்கள் மற்றும் ஒட்டு இறப்பர் பயிர்கள் போன்ற முறையினூடாக இறப்பர் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பனியின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் முறையே 47.58 ஹெக்டயார்கள் வீதம் வருடாந்தம் தெங்கு பயிரிட திட்டமிட்டிருந்த போதும் கம்பனி 2023 ஆண்டில் தெங்கு பயிரிட்டிருக்காததுடன் 2024 ஆண்டில் 1 ஹெக்டயாரில் மாத்திரம் தெங்கு பயிரிட்டுள்ளதாக முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.<br>கம்பனியின் தென்னை மரங்களின் வயது பகுப்பாய்வின் பிரகாரம் தென்னை மரங்களில் 68 சதவீதம் அளவு 40 வயதை விஞ்சிய குறைந்த உற்பத்தித்திறன் கொண்ட மரங்கள் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.<br>2023 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் தேங்காய் ஒன்றின் உற்பத்தி கிரயம் தென்னை பயிரிடும் 02 பெறுந் தோட்டங்களில் 31 சதவீதத்திற்கும் 48 இற்கும் இடையிலான வீச்சளவால் அதிகரித்திருந்தது. 2023 ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆண்டில் தேங்காய் ஒன்றின் சராசரி விற்பனை விலை அதிகரித்திருந்த போதும் ஹபுகஸ்பிடிய பெறுந்தோட்டத்தில் 2024 ஆண்டில் விற்பனை விலைக்கு ஒப்பாக அதன் கிரயம் 83 சதவீதமானது. | கம்பனியில் தற்போது காணப்படும் தென்னை பயிர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் தென்னை பயிர்களின் 70% சதவீதமளவு 40 வயதைவிட பழைய தெங்கு பயிர்களாகும். ஆயுட்காலம் 40 வயதைவிட பழைய தெங்கு பயிர்களை அகற்றி மீள் பயிரிடுதல் அத்தியவசியமான போதும் கம்பனியில் காணப்படும் செயற்படு மூலதன பற்றாக்குறை மற்றும் முதலீட்டு நலன்களை அடைந்து கொள்ள 08 ஆண்டுகளிற்கு அதிக காலம் செல்வதால் கம்பனியிடம் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை நீண்டகால மூலதன முதலீட்டிற்காக ஒதுக்கி வைப்பதற்கு கடினமாகவுள்ளது.<br>மேலும் கம்பனிக்கு சொந்தமான தெங்கு பெறுந் தோட்டங்களில் இரண்டு தசாப்தங்களிற்கு அதிக காலமாக தேவையான இரசாயன பசளை வழங்கப்படாமை காரணமாக அனைத்து மரங்களினதும் வளர்ச்சி மற்றும் அதன் உற்பத்தித்திறன் மிகவும் வேகமாக குறைவடைந்துள்ளது. | தென்னை பயிர்களின் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் நிலையான பயிர்களை பேணிச் செல்ல முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்தவும் தேங்காய் அறுவடையை அதிகரித்துக் கொள்ள மற்றும் உற்பத்தி கிரயத்தை குறைத்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தென்னை தொழிலில் தேங்காய் விழும் தரநிலை 05 சதவீதமான போதும் எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியில் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் விழுந்த தேய்காய்களின் எண்ணிக்கை முறையே 386,700 மற்றும் 240,139 ஆனதுடன் இரண்டு ஆண்டிலும் முறையே மொத்த தேங்காய் அறுவடையில் 34 சதவீதம் மற்றும் 28 சதவீத அளவானது. அதன் பிரகாரம் மில்லவான பெறுந்தோட்டத்தில் | தென்னை மரங்களில் 21,330 மரங்கள் அதாவது 70% சதவீத அளவு உயரம் 40 அடியை விட அதிக உயரமாவதுடன் அதிலும் அதிகளவானவை 60 அடியை விட அதிகமானவையாகும். இந்த பெறுந்தோட்டத்தில் தேய்காய் பரித்தல் ஒப்பந்த அடிப்படையில் கேகிகள் மூலம் பரிக்க முடியுமான உச்ச உயரம் 60 அடிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது களத்தில் மரம் ஏறுவதன் மூலம் தேங்காய் பரிப்பவர்களில் | தேங்காய் பரிக்கும் பணியை உரியவாறு முகாமைத்துவம் செய்வதனூடாக விழுந்த தேங்காய்களின் சதவீதத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| 2015 முதல் 2024 வரை 10 ஆண்டுகளில் விழுந்த தேய்காய்களின் (Fallen Nuts) சதவீதம் 17 முதல் 35 வரையான வீச்சளவை கொண்டிருந்ததுடன் தரநிலை அளவான 5 சதவீதம் கவனத்திற் கொள்ளும் மட்டத்திற்கு அதிகரித்திருந்தது. | காணப்படும் பற்றாக்குறை மற்றும் அதிக உயரமான தேங்காய் மரங்களிற்கு ஏறுவதற்கு தயக்கம் காட்டுவதால் தேங்காய் விழும் சதவீதம் தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளதென. |

**3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாலந்த பெறுந்தோட்டத்தில் 2024 ஆண்டில் மூல மரமுந்திரிகை உற்பத்தி கிலோ கிராம் 10,423 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் முதலாம் முறை கிலோ கிராம் 5778 மரமுந்திரிகை இருப்பு முன்னால் தோட்ட அத்தியட்சகரினால் ரத்வத்த பெறுந்தோட்டத்தில் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலைக்கு உளர்த்துவதற்காக எடுத்து சென்றிருந்த போதும் ரத்வத்த தேயிலை தொழில்சாலையில் இருந்து பொருள் கிடைத்தமைக்கு துண்டொன்றை (GRN) பெற்றிருக்கவில்லை. குறித்த மரமுந்திரிகையை உளர்த்தி காய்ந்த மரமுந்திரிகை கிலோ கிராம் 3,928.2 அதாவது மூல மரமுந்திரிகை நிறையின் 68 சதவீதம் உளர்த்திய மரமுந்திரிகை அளவு விற்பனை செய்யப்பட்டிருந்தது. 2024 ஆண்டில் இரண்டாம் மரமுந்திரிகை இருப்பில் மூல மரமுந்திரிகை உளர்த்தியதில் 74 சதவீதமான குறைந்த உளர்த்திய மரமுந்திரிகை சதவீதம் கிடைத்துள்ளதுடன், அதன் பிரகாரம் ரத்வத்த பெறுந் தோட்டத்தில் தேயிலை தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்ற முதலாம் மரமுந்திரிகை இருப்பிலிருந்தும் குறைந்த பட்சம் 74 சதவீத அளவு இருந்திருக்க முடியுமாகையால் ரூபா 128,664 ஆளவான நட்டம் கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். ஏற்பட்டுள்ள ரூபா 128,664 ஆன நட்டம் தொடர்பாக காரணம் காட்டுமாறு குறித்த தோட்ட அத்தியட்சகரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது.. | முறையான விசாரணை ஒன்றை நடாத்தி பொறுப்பான தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்கவும் மதிப்பீட்டு நட்டத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் முதலீடு செய்துள்ள நிலையான வைப்புக்கள் 12 ஆண்டுகள் பூராவும் நடைமுறை கணக்குகளில் வங்கி மேலதிக | ஏற்றுக் கொள்கிறேன். 2025 மே மாதம் குறித்த வங்கி மேலதிக பற்றை முழுமையாக | முறையான நிதி முகாமைத்துவத்தின் கீழ் வருமான உருவாக்கத்தை |

| | | | |
|---|---|---|---|
| | பற்றிற்காக பிணைக்கு வைக்கப்பட்டு இருந்ததுடன் வங்கி மேலதிக பற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்காததால் வருடாந்த நிலையான வைப்பு வட்டி வருமானத்தை விஞ்சிய மேலதிக பற்று வட்டி செலவை மேற்கொண்ட காரணத்தால் 2012 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 12 வருட காலத்தினுள் கம்பனிக்கு ரூபா 40,908,739 ஆன தேறிய நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | தீர்த்துள்ளதுடன் அதன் மூலம் 2025 செப்டம்பர் 30 திகதியுடன் முடிவடைந்த ஆரம்ப 09 மாதங்களிற்காக ரூபா 6.4 மில்லியனான தேறிய வட்டி வருமானத்தை பெற்றுள்ளது. | அதிகரித்து செலவுகளை குறைத்துக் கொண்டு வங்கி மேலதிக பற்றை தீர்க்க வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |
| (இ) | கம்பனிக்கு சொந்தமாக காணப்படும் கட்டிடங்களை 2024 திசெம்பர் 31 திகதிக்கு மதிப்பிட்டு சொத்துக்களின் சரியான பெறுமதியை இனங்கண்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் கம்பனிக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் மீள்மதிப்பீடு செய்ய எதிர்பார்ப்பதென. | உரிய காலத்தில் சொத்துக்களை மதிப்பிட்டு சரியான பெறுமதியை இனங்காண வேண்டும். |
| (ஈ) | கம்பனிக்கு சொந்தமான இரண்டு பெறுந் தோட்டங்களில் காணப்படும் 03 கட்டிடங்களில் தற்போது அனுமதியின்றி நபர்கள் குடியேறியுள்ள போதும், முகாமைத்துவத்தினால் இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். அனுமதியற்ற குடியிருப்பாளர் தொடர்பாக சட்ட நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. | உரியவாறு நடவடிக்கை எடுத்து அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றவும் சொத்துக்களை பாதுகாக்கவும் வேலைத் திட்டமொன்றை இடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | கம்பனிக்கு சொந்தமான வாகனங்களை 2025 செப்டம்பர் 01 வரை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2024 திசெம்பர் 31 திகதி வரை எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியினால் பயன்படுத்துகின்ற போதும் எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனிக்கு சுவீகரிக்காத 25 வாகனங்கள் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கிறேன். நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து போக்குவரத்து வாகனங்களையும் எதிர்காலத்தில் மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். அவ்வாறே கம்பனிக்கு சுவீகரிக்காத வாகனங்களை சுவீகரித்து தருமாறு அந்த போக்குவரத்து வாகனங்களின் முழுமையான உரிமையாளரான இலங்கை பெறுந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு எழுத்து மூலம் அறிவித்து அனுப்பியுள்ளதென. | உரிமையை சுவீகரிக்காத வாகனங்களின் உரிமையை சுவீகரிக்கவும் உரிய காலத்தினுள் வானங்களை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2024 ஆண்டில் நடாத்திச் சென்றுள்ள முற்பண பதிவேட்டின் பிரகாரம் 12 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 16,275,000 பெறுமதியான | ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் தற்போது முற்பணத்தை விடுவிக்கும் போது அதற்கு முன்னர் பெற்றுக் கொண்டுள்ள | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முற்பணத்தை தீர்ப்பதனை தாமதித்த |

| | | |
|---|---|---|
| முற்பணங்கள் 08 நாட்கள் முதல் 197 நாட்கள் வரையான காலம் வரை தீர்க்க தாமதமாகியிருந்தது. | முற்பணத் தொகையை தீர்த்து முடிவுறுத்தும் வரை எந்தவித முற்பணத்தையும் விடுவிக்காதிருக்கவும் வழங்கிய அனைத்து முற்பண தொகையையும் 14 நாட்களிற்குள் தீர்த்து முடிவுறுத்தவும் தேவையான அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறமை இண்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனிக்கு சொந்தமாக 06 தொழிற்சாலைகள் காணப்படுவதுடன் செலகம மற்றும் பன்சனதென்ன தொழிற்சாலைககள் 2043 ஆண்டு வரை தனியார் துறைக்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது. எல்கடுவ மற்றும் பிடகந்த ஆகிய 2 தொழிற்சாலைகள் முறையே 1987 மற்றும் 2002 ஆண்டு முதல் செயற்படும் நிலையில் காணப்படாததுடன் பண்டாரபொல தொழிற்சாலையில் உற்பத்தி செயற்பாடுகள் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ரத்வத்த தேயிலை தொழிற்சாலையை 2008 ஆண்டில் 30 ஆண்டுகளிற்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்த போதும் முதலாம் குத்தகை காலம் முடிவடைதல் மற்றும் அக் காலத்திற்கு உரியவாறு குத்தகை தொகையை செலுத்தாத காரணத்தால் 2019 ஆண்டில் தொழிற்சாலையை மீண்டும் கம்பனிக்கு சுவீகரித்திருந்த போதும் 2024 திசெம்பர் 31 திகதியளவில் குத்தகைதாரரிடமிருந்து ரூபா 5,630,494 தொகை கம்பனிக்கு அறவிட வேண்டியதாக இருந்தது. இந்த தொழிற்சாலை தற்போது விளைவற்ற நிலையில் காணப்படுவதுடன் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள கம்பனியினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் ரத்வத்த தேயிலை தொழிற்சாலையை குறித்த குத்தகை தாரரினால் (A.P.N.Plantations) பாரிய தொகை செலவிட்டு நவீனமயமாக்கியுள்ளதுடன் தற்போது அந்த தொழிற்சாலையை கம்பனிக்கு சுவீகரித்துள்ளதுடன் இந்த ரத்வத்த தொழிற்சாலையை மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு திணைக்களத்திற்கு ஆரம்ப கொடுப்பனவையும் செய்துள்ளதுடன் மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்த உடனே குறித்த சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதென. | முறையான ஆய்வு மற்றும் வேலைத் திட்டமொன்றை இட்டு செயற்படாத நிலையில் உள்ள தொழிற்சாலையை பயன்படுத்த முயற்சி எடுக்கவும் நிலுவை குத்தகை தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறையாக்கவும் பொருத்தமான சேயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முறையான திட்டமொன்று மற்றும் மேற்பாரவையின் கீழ் காலரீதியாக கட்டிடத்தை பராமரித்தல் மற்றும் திருத்த வேலைகளை மேற்கொள்ளாத காரணத்தால் கம்பனிக்கு சொந்தமான 05 பெறுந்தோட்டங்களிற்கு உரியதாக காணப்படும் 20 கட்டிடங்கள் முழுமையாக உடைந்து விழுந்து மற்றும் தற்போது பயன்படுத்த முடியாத மட்டத்திற்கு ஆகியுள்ளதுடன் உரியவாறு பராமரிக்காததால் அரச ஆதனத்தை அழிவடைய இடமளிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது கம்பனியின் மூலதன நிதியை பெற்றுக் கொள்ளும் கடினம் காரணமாக இந்த கட்டிடங்களை திருத்திக் கொள்ள முடியாதுள்ளதாகவும் இனங்காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களை வரிசை அமைச்சின் ஊடாக பொருத்தமான வெளி முதலீட்டாளர்களிற்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | முறையான வேலைத் திட்டமொன்று மற்றும் கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்து அரச ஆதனங்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 06 பெறுந்தோட்டங்களிற்கு உரியதாக காணப்படும் தற்போது பயன்படுத்தப்படும் மற்றும் பயன்படுத்த முடியாத 53 கட்டிடங்கள் திருத்தம் செய்யப்படும் நிலையில் காணப்படுவதுடன், அவற்றை திருத்துவதற்காக முகாமைத்துவத்தினால் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை இதுவரை செயற்படுத்தி இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது கம்பனியின் மூலதன நிதியை பெற்றுக் கொள்ளும் கடினம் காரணமாக இந்த கட்டிடங்களை திருத்திக் கொள்ள முடியாதுள்ளதாகவும் இனங்காணப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களை வரிசை அமைச்சின் ஊடாக பொருத்தமான வெளி முதலீட்டாளர்களிற்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதென. | திருத்தி பயன்படுத்துவதற்காக பொருத்தமான செயற்முறை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ) | 06 வகைகளிங்கு உரிய 29 வாகனங்கள் 06 ஆண்டுகளிற்கும் 25 இற்கும் இடையிலான காலமாக விளைவற்று காணப்பட்டதுடன், அவற்றை திருத்தம் செய்து பயன்படுத்த அல்லது பராதீனம் செய்ய முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். இந்த பயன்படுத்த முடியாத வாகனங்களை பொருத்தமானவாறு பராதீனம் செய்ய எதிர்காலத்தில் எதிர்பார்ப்பதென. | முறையாக சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹபுகஸ்பிடிய பெறுந்தோட்டத்தில் தோட்ட அத்தியட்சகரிற்கு வழங்கியிருந்த ஜீப் வண்டி தொழிற்நுட்ப கோளாறு ஏற்பட்டதன் | ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் குறித்த மோடார் வண்டியின் தொழில்நுட்ப கோளாறு | முறையாக சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக 2023 செப்டம்பர் 14 திகதி வேரகம ஊர்திச்சாலை ஒன்றிற்கு திருத்த வேலைகளிற்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 திகதி வரை அதனை உரிய நிலைக்கு மீட்டிக் கொண்டிருக்கவில்லை. | திருத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தொகையை செலுத்தி அந்த வாகனத்தை விடுவித்துக் கொள்ள எதிர்பார்ப்பதென. | வேண்டும். |
| (உ) | பண்டாரபொல பெறுந்தோட்டத்தினால் பயன்படுத்தும் லொரி வண்டி ஓட்ட நிலையில் காணப்படாததால் 2024 ஏப்ரல் மாதம் முதல் திருத்த வேலைகளிற்காக ஊர்திச்சாலை ஒன்றிற்கு அனுப்பியிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 திகதி வரை அதனை உரிய நிலைக்கு மீட்டெடுக்காது 08 மாதங்களிற்கு கிட்டிய காலமாக விளைவற்று காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். இந்த லொரி வண்டியை திருத்துவது பொருளாதார ரீதியாக இலாபகரமற்றதால் அந்த வண்டியை பராதீனம் செய்ய எதிர்பார்ப்பதென. | - மேற்படி - |
| (ஊ) | எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியினால் வாகனங்களிற்காக லொக் புத்தகத்தை பேணிச் சென்றிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | லொக் குறிப்பு புத்தகத்தை பயன்படுத்த வேண்டும். |
| (எ) | கம்பனியின் 16 வாகனங்களின் பௌதீக நிலைமை மற்றும் தற்போது இருக்கின்ற நிலையங்கள் தொடர்பாக வழங்கிய தகவல்கள் பிரகாரம் அந்த வாகனங்களில் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | கணக்காய்விற்கு கோரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மாற்றமாக மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி கம்பனியின் இரண்டு தோட்ட அத்தியட்சகர்களிற்கு "முழு முகாமையாளர்" எனும் பதவி 2024 ஜுலை 26 திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் உருவாக்கி, ரூபா 50,000 தொகை படியை செலுத்த அங்கீகரித்திருந்ததுடன் 2024 ஆகஸ்ட் முதல் 2024 திசெம்பர் 31 வரை 05 மாதங்களிற்காக இரண்டு தோட்ட அத்தியட்சகர்களிற்காக ரூபா 250,000 ஆன படிகள் திறைசேரி | ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினம் நிறுவனத்தில் தற்போது வெற்றிடமாக காணப்படும் பொது முகாமையாளர் பதவியிற்கு, பெறுந்தோட்டங்களிற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து பொறுப்புகளும் இந்த இரண்டு முழு முகாமையாளர்களினால் மேற்கொண்டு வருவதாகவும் அதன் மூலம் பொது முகாமையாளர்களிற்காக | முறையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது பதிவியை உருவாக்கி அதற்குரிய படிகளை செலுத்திய தரப்பினரிடமிருந்து செலுத்தியுள்ள படிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டு இருந்தது. | மாதந்தம் செலவிட வேண்டிய ரூபா 03 இலட்சத்திற்கு கிட்டடிய மொத்த தொகையில் ரூபா 2.5 இலட்சம் அளவான தொகையை சேமித்துக் கொள்ள கம்பனிக்கு இயலுமாகியுள்ளது. எனினும் தற்போது உரு முழு முகாமையாளர் ஒருவர் அந்த பதவியிலிருந்து விழகிச் சென்றுள்ளதென. | |
| (ஆ) | நிறைவேற்று பங்களாவிற்காக இரண்டு உள்ளக தொழிலாளர்களின் சேவையை பெற்றுக் கொள்ள முடியுமாவதுடன் பங்களா உரித்துடைய உத்தியோகத்தர் உள்ளக தொழிலாளரை சேவையில் ஈடுபடுத்தினால் அந்த தொழிலாளர்களின் வரவை கள உத்தியோகத்தரினால் உறுதி செய்து கொண்ட பின்னர் களத் துண்டில் மற்றும் செக்ரோலில் அவர்களின் யெர்களை உட்படுத்தி, மாதாந்தம் தோட்ட அலுவலகத்தினால் குறித்த தொழிலாளர்களிற்கு சம்பளம் செலுத்த வேண்டும். 2019 பெப்ரவரி 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை கம்பனியின் கடமையாற்றும் விற்பனை முகாமையாளரிற்கு வசிப்பதற்காக பங்களாவொன்றை வழங்கி இருக்காத போதும் அவரால் இரண்டு உள்ளக தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தியதாக குறிப்பிட்டு மேற்குறித்த காலப் பகுதிக்காக ரூபா 4,459,949 ஆன் தொழிலாளர் படிகள் வழங்கப்பட்டிருந்தது.<br>இரண்டு உள்ளக தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தியதாக கள உத்தியோகத்தரும் உறுதி செய்யாததுடன், மேற்குறித்த காலப் பகுதியில் எந்தத் தினத்திலும் காலைநேர அணிவகுப்பிற்கும் இரண்டு தொழிலாளர்கள் வருகைதராத போதும் இந்த படிகளை அவரால் தனிப்பட்ட முறையில் பெற்றிருந்ததுடன் தவிசாளரினால் மேற்குறித்த நபரை விழித்த 2019 சனவரி 10 திகதிய கடிதம் மூலம் தனிப்பட்ட இல்லத்திற்கு அல்லது அந்த உத்தியோகத்தரிற்கு தொழிலாளர் படிகளை பணமாக | ஏற்றுக் கொள்கிறேன். விற்பனை முகாமையாளரிற்கு வசிப்பதற்காக பங்களாவொன்றை வழங்கி இருக்காத போதும் மற்றும் உள்ளக /பதிவு செய்த தொழிலாளர்களை அந்த பங்களாவில் கடமையில் ஈடுபடுத்தியதாக கள உத்தியோகத்தர்கள் உறுதி செய்திருக்காத போதும் மற்றும் நாலந்த பெறுந் தோட்டத்தில் கடந்த 12 அணிவகுப்புக்களை நடாத்தியிருக்கும் போதும், அந்த எந்த அணிவகுப்பிற்காவது ஒரு தொழிலாளியும் வந்திருக்காத போதும், உள்ளக /பதிவு செய்த இரண்டு தொழிலாளர்களை கடமையில் ஈடுபடுத்தியதாக போலியாக குறிப்பிட்டு ரூபா 4,459,949 ஆன் தொழிலாளர் படிகளை பெற்றுக் கொண்டமை மற்றும் அந்த தொழிலாளர்களிற்காக ரூபா 557,872 தொகையை நியதிச்சட்ட நிதியத்திற்காக செலுத்தி அறவிட முடியாத நட்டமொன்றாக்கியது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் சாட்டுதல்கள் புலனாய்வு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளதுடன் தற்போது அந்த உத்தியோகத்தரின் சேவையை தற்காலிகமாக | ஒழக்காற்று நடடிக்கை எடுத்து விரைவில் நட்டத்தை அறவிடவும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள உள்ளக வேலைத் திட்டமொன்றை இட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பிற்காக கூட்டுத் தொகை ரூபா 557,872 தொகையை அறவிட முடியாத நியதிச் சட்ட கொடுப்பனவொன்றை இரண்டு ஊழியர்களிற்காக கம்பனிக்கு செலுத்த நேரிட்டிருந்தது. | இடைநிறுத்தி அவறிற்கு குற்றப் பத்திரமொன்றை விநியோகித்துள்ளதென. | |
| (இ) | கம்பனியின் 2020 முதல் 2024 ஆண்டு வரை கடமையாற்றிய தவிசாளரிற்கு ரத்வத்த பெறுந்தோட்டத்தில் பன்சல்தென்ன பங்களாவை வழங்கியிருந்ததுடன், அவரால் அவரின் உணவிற்கான நுகர்வு செலவுகளை எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியிடம் மீள்நிரப்பு செய்திருந்ததுடன் அதன் பிரகாரம் மேற்குறித்த காலப் பகுதியில் 40 மாதங்களிற்காக ரூபா 2,202,293 ஆன் தின உணவு செலவை தவிசாளரிற்காக கம்பனியினால் மேற்கொண்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். குறித்த காலப் பகுதியினுள் கடமையாற்றிய அந்த தவிசாளரின் தனிப்பட்ட நுகர்வு செலவான ரூபா 2,202,293 தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் சாட்டுதல் புலனாய்வு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முறையாக செயற்பட்டு நட்டத்தை அறவிட வேண்டும். |
| (ஈ) | எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் நிறைவேற்று அல்லாத பதவியொன்றான தகவல் தொழிநுட்ப முகாமையாளராக கடமையாற்றும் உத்தியோகத்தரிற்கு ரத்வத்த தோட்டத்தில் நிறைவேற்று உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறைவேற்று பங்களாவில் தொழிலாளர் ஒருவரை கடமையில் ஈடுபடுத்த தகவல் தொழில்நுட்ப முகாமையாளரின் கோரிக்கை பிரகாரம் 2024 மே 09 திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 மே மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை 08 மாதகாலமாக அவ்வாறான தொழிலாளர் ஒருவர் அல்லது வேறு அமைய தொழிலாளர் ஒருவரை பங்களாவின் உள்ளாக கடமையில் ஈடுபடுத்தாது தகவல் தொழில்நுட்ப முகாமையாளரினால் ரூபா 256,050 தொகை பெறப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். தகவல் தொழிநுட்ப முகாமையாளராக கடமையாற்றும் உத்தியோகத்தர் தொழிலாளர் ஒருவரை கடமையில் ஈடுபடுத்தாது ரூபா 256,050 ஆன தொகையை பெற்றுள்ளது தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழல் சாட்டுதல் புலனாய்வு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒழக்காற்று நடடிக்கை எடுத்து விரைவில் நட்டத்தை அறவிட வேண்டியதுடன் இவ்வாறான நிலைமைகளை தவிர்த்துக் கொள்ள உள்ளக கட்டுப்பாட்டை வலுவூட்ட வேண்டும். |
| (உ) | உள்ளக கணக்காய்வாளரினால் உத்தியோகபூர்வ பங்பளாவொன்றை கோரியிருந்ததுடன், அந்த தேவைப்பாட்டை நிறைவு செய்ய | ஏற்றுக் கொள்கிறேன். உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரிற்கு மாதாந்தம் செலுத்தியுள்ள | முறையாக செயற்பட்டு திறைசேரி அங்கீகாரமின்றி வீட்டு படியை |

| | | | |
|---|---|---|---|
| | முடியாததால் திறைசேரியின் அங்கீகாரமும் இன்றி 2023 ஒக்டோபர் 04 திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானம் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரிற்கு மாதாந்தம் ரூபா 50,000 ஆன வீட்டு வாடகை படியை வழங்க அங்கீகரித்திருந்ததுடன் அதன் பிரகாரம் 2023 நவம்பர் மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை செல்லுபடியற்ற சட்டரீதியான குத்தவை வாடகை உடன்படிக்கை மீது திறைசேரி அங்கீகாரமும் இன்றி ரூபா 700,000 செலுத்தப்பட்டு இருந்தது. | ரூபா 50,000 ஆன வீட்டு வாடகை படியை ஏற்கனவே இரத்து செய்யப்பட்டுள்ளதென. | செலுத்தியதற்கு உரிய பொறுப்பான தரப்பினரிடமிருந்து குறித்த கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2011 மார்ச் 21 திகதி உதவி கணக்காளர் (நிதி உத்தியோகத்தர்) பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிற்கு 2022 திசெம்பர் 05 திகதி நடந்த பணிப்பாளர் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் பிரகாரம் அப்பதவியில் MM-1-1 சம்பளப் பிரிவில் நிறுவியிருந்த போதும் ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் தற்போது வகிக்கும் பதவியான நிதி உத்தியோகத்தர் பதவிக்கு JM-1-1 சம்பளப் பிரிவில் நிறுவ வேண்டியதுடன், அதன் காரணமாக 2023 சனவரி முதல் 2024 திசெம்பர் வரை ரூபா 986,690 ஆன சம்பளம் மேலதிகமாக செலுத்தப்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மாற்றமாக தவறான சம்பள அளவில் நிறுவி சம்பளம் செலுத்தியமை தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்திய சம்பளத்தை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |
| (எ) | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம், தவிசாளரின் செயலாளர் பதவிக்கு வழங்க வேண்டிய சம்பள பிரிவு JM-1-1 ஆக வேண்டிய போதும் அந்த பதவி வகிக்கும் உத்தியோகத்தரிற்கு 2022 நவம்பர் 01 திகதி முதல் MM-1-1 சம்பன பிரிவில் நிறுவி சம்பளம் செலுத்தியிருந்ததுடன் அதன் பிரகாரம் 2022 நவம்பர் முதல் 2024 திசெம்பர் வரை இந்த உத்தியோகத்தரிற்கு ரூபா 540,785 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மாற்றமாக தவறான சம்பள அளவில் நிறுவி சம்பளம் செலுத்தியமை தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஏ) | எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் நிதி முகாமையாளராக 2024 சனவரி 23 திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் | ஏற்றுக் கொள்கிறேன். இந்த போக்குவரத்து வசதிகள் பணிப்பாளர் சபையின் தீர்மமானத்தின் | உடன்படிக்கை பிரகாரம் செயற்பட வேண்டியதுடன் அதற்கு மாற்றமாக |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தரிற்கு ஒப்பந்த உடன்படிக்கையில் இணக்கியிருக்காத நிறுவனத்திற்கு சொந்தமான மோடார் வாகனத்தை ஒதுக்கி வாகனமொன்றாக வழங்கி 2024 மார்ச் மாதம் முதல் 2024 திசெம்பர் மாதம் வரை ரூபா 882,448 ஆன் எரிபொருள் செலவுகள் மீள்நிரப்பப்பட்டிருந்தது. | மீது கடமை தேவைப்பாட்டின் மீது வழங்கியுள்ள போதும் இந்த வசதிகளை தொடர்ந்தும் வழங்குவது தொடர்பாக தேவையான அறிவுரைகளை மற்றும் அங்கீகாரத்தை கோரி வரிசை அமைச்சிற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென. | மேற்கொண்டுள்ள கொடுப்பனவுகளை அதற்குரிய தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.4.3 (அ) பந்தி பிரகாரம் எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனிக்கு 2024 ஆண்டிற்காக வபழங்குனர்களை பதிவு செய்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். எவ்வாறாயினும் 2025 ஆண்டு முதல் வழங்குனர்களை வருடாந்தம் பதிவு செய்வதனை ஆரம்பித்துள்ளதென. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கம்பனியினால் 2024 ஆண்டினுள் வாகன திருத்தம் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் போது தவிர ஏனைய பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு இருக்காததுடன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6 பந்தியில் குறிப்பிடப்படும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்களின் பொறுப்பு மற்றும் பணிப்பொறுப்புக்கள் பெறுகைகள் குழுவினால் மேற்கொண்டிருந்த போதும், பெறுகைகள் குழுவிற்கு பெறுகைகள் செய்யப்படும் உருப்படிகள் தொடர்பாக நிபுணத்துவ அறிவுடைய ஒருவரை நியமிக்காது 59 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 36,971,390 பெறுமதியான கொள்வனவுகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை இன்றி மேற்கொள்ளப்பட்டு இருந்தது. மேலும், விலைகள் கோரப்படும் போது திறந்த விலை கோரல் செய்யப்பட்டுள்ளதாக பெறுகைகள் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதும், அரச வழிகாட்டிக் கோவையின் 1.2.1 பந்தியில் குறிப்பிடுவதன் பிரகாரம் | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் பொருத்தமான தொழில்நுட்ப அறிவுடைய நபர்களை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்க முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுப்பதாக அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 1.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | முறையான விசாரணையொன்றை நடாத்தி குறித்த தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்கவும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவும் வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகைமையுடைய ஆர்வம் காட்டும் தரப்பினரிற்கு பெறுகைகளில் சமமான மற்றும் உச்ச சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் எனும் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது இந்த விலை கோரல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | | |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.7.5 பிரிவின் பிரகாரம் பேறுகைகள் குழுவிற்கு நிறுவனத்திற்கு வெளியில் அமைச்சின் உதவி செயலாளர் மட்டத்தில் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதும், 2024 ஆண்டில் மேற்கொண்ட எந்தவொரு வெறுகைகள் குழுவிற்கும் நிறுவனத்திற்கு வெளியில் நபரொருவரை பங்குபற்ற செய்திருக்கவில்லை. | 2025 ஆண்டில் கம்பனியின் பெறுகைகள் சிறிய மற்றும் பிரதான குழுக்களிற்கு அங்கத்தவர் ஒருவர் அமைச்சிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். அதன் பிரகாரம் பெறுகைகள் (சிறிய) குழுவிற்கு நிறுவனத்தின் மூன்று அங்கத்தவர்களும் பெறுகைகள் (பிரதான) குழுவிற்கு நிறுவனத்தின் இரண்டு அங்கத்தவர்களும் அமைச்சின் பணிப்பாளர் மட்டத்தில் அங்கத்தவர் ஒருவரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். | - மேற்படி - |
| (ஈ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் தொழில்நுட்ப அளவுத் திட்ட பண்டங்கள் அல்லது சேவைக்காக மணுவை தயார் செய்ய மணுதாரரிற்கு தேவையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய மணு கோரும் ஆவணத்தை பெறுகைகளின் போது பயன்படுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், அவ்வாறு மணு கோரும் ஆவணத்துடன் அல்லது நிறுவனத்திற்கு தேவையான அளவுத் திட்டங்களின் திட்டம் போன்றவற்றை மணுதாரரிற்கு அறிவிக்காது விலை கோரல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். பெறுகைகள் வழிகாட்டி கோவையின 05 அத்தியாயம் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதென. | - மேற்படி - |
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.8.1.(அ) பந்தி பிரகாரம் எந்த அங்கத்தவரும் பெறுகைகள் குழு மற்றும் மதிப்பீட்டுக் குழு ஆகிய இரண்டிலும் பணியாற்றக் கூடாது என குறிப்பிட்டுள்ள போதும் இந்த நிறுவனத்தில் வாகன திருத்தம் மற்றும் வாகன உதிரிப்பாக கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப | ஏற்றுக் கொள்கிறேன். பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.8.1.(அ) பந்தி பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமெனா. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகைகள் குழுக்களில் ஒரே பெறுகைகளிற்கு உரியதாக ஒரே அங்கத்தவர்களை நியமித்துள்ள 10 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | | |
| (ஊ) | பெறுகைகளை கோரும் போது அந்த பெறுகைகள் செயற்பாட்டை மேற்கொள்ளும் நிறுவங்களினால் பெறுகைகளை கோருவதற்கு பதிலாக நபர்களின் பெயர்களிற்கு விலைகள் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| (எ) | பெறுகைகள் தீர்மானங்களிற்கு பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தை வழங்கியிருக்காத போதும் ஒரு உத்தியோகத்தரின் இணக்கப்பாட்டின் பிரகாரம் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 1,312,821 பெறுமதியான தீர்மானத்தை எடுத்து முறையற்ற விதத்தில் பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | பெறுகைகள் அங்கீகாரத்தை வழங்கு சந்தர்ப்பத்தில் பெறுகைகள் குழுவின் அங்கத்தவர்கள் தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டு குறித்த அங்கீகாரத்தை வாய் மொழி மூலம் வழங்கியுள்ளதுடன் பின்னொரு சந்தர்ப்பத்தில் அந்த அங்கீகாரத்திற்கு கையொப்பமிட்டு வழங்கியுள்ளதென. | - மேற்படி - |
| (ஏ) | வாகனமொன்றின் திருத்த வேலைகளிற்கு உரிய பெறுகைகள் குழு தீர்மானம் 2024 மார்ச் 29 திகதி வழங்கப்பட்டுள்ள போதும், அதற்கு முன்னர் 2024 மார்ச் 28 திகதி ரூபா 31,000 ஆன வவுசர் பத்திரங்கள் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் வாகனமொன்றின் திருத்த வேலைகளை மேற்கொள்ள பெறுகைகள் தீர்மானம் 2024 ஜுலை 25 திகதி பெறப்பட்டிருந்த போதும், அதற்கு முன்னர் 2024 ஜுலை 18 திகதி அந்த வாகனத்தை திருத்த ரூபா 500,000 ஆன முற்பணத்தை திருத்தும் கம்பனிக்கு செலுத்தி இருந்ததால் பெறுகைகளின் முறையற்ற தன்மை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | முறையான விசாரணையொன்றை நடாத்தி ஒழுங்கற்ற பெறுகைகளிற்கு உரிய தரப்பினரிற்கு நடடிக்கை எடுக்கவும், பெறுகைகள் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 ஏனைய விடயங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் ஆட்சேர்ப்பு திட்டத்தின் 5.1 பந்தி பிரகாரம் முகாமையாளர் (மனித வளம்) பதவிக்கு வெளியிலிருந்து உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்க்கும் போது வர்த்தகம், பொது நிருவாகம் அல்லது மனிதவள முகாமைத்துவம் தொடர்பான ஏற்றுக் கொண்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துடன் 03 ஆண்டுகால நிருவாகம் தொடர்பாக அரச அல்லது ஏற்றுக் கொண்ட தனியார் நிறுவனமொன்றின் அனுபவத்துடன் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனுபவம் தேவையென குறிப்பிட்டுள்ள போதும் 2019 சனவரி 15 திகதி முதல் 2021 நவம்பர் 30 திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் அந்த பதவியில் மற்றும் முகாமையாளர் (Outgrower) ஆக கடமையாற்றிய உத்தியோகத்தரிற்கு 2021 திசெம்பர் 01 திகதி முதல் முகாமையாளர் (மனித வளம் ) ஆன் நிரந்தர நியமனம் வழங்கி இது வரை கடமையாற்றிக் கொண்டிருந்த போதும் உத்தியோகத்தரிற்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள தகைமைகள் இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். இந்த முகாமையாளர் (மனிதவளம்) பதவிவகிக்கும் உத்தியோகத்தர் நிகழ்நிலை முறையினூடாக பட்டதாரி பாடநெறியொன்றை பயிலுவதாக அறிவித்துள்ளதென. | ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறித்த ஆட்சேர்ப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 01 திகதி முதல் முகாமையாளர் (மனித வளம்) பதவியில் நிரந்தர நியமனம் வழங்கியிருந்த உத்தியோகத்தர் முகாமையாளர் (Out-grower) பதவியில் பதிற்கடமைக்காக நியமித்து ரூபா 10,000 ஆன் பதிற்கடமை படியை திறைசேரி அங்கீகாரமின்றி வழங்கியிருந்ததுடன் அத்திகதி முதல் 2024 சனவரி 12 திகதி வரை அந்த பதவியில் பதிற்கடமை காலத்தித்தினுள் ரூபா 253,648 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது இந்தப் படியை இரத்துச் செய்துள்ளதென. | - மேற்படி - |
| (இ) | 2012 சனவரி 04 திகதி எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியில் தற்போது செயற்படுத்தும் ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்) என பதவியொன்று | ஏற்றுக் கொள்கிறேன். ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு மாற்றமாக தவறான சம்பள அளவில் நிறுவி சம்பளம் கொடுப்பனவு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகார ஆளணி பதவினுள் இல்லாத போதும் 2005 ஒக்டோபர் 03 திகதி முதல் கணக்கு உதவியாளராக செயற்பட்டுள்ள உத்தியோகத்தரிற்கு 2014 ஆகஸ்ட் 01 திகதி முதல் (தகவல் தொழில்நுட்பம்) பதவிக்கு பதவியுயர்வு வழங்கி 2022 திசெம்பர் 12 திகதி முதல் அவரின் சம்பளத்தை IM-1-1 பிரிவில் நிறுவுவதற்கு பதிலாக MM-1-1 பிரிவில் நிறுவி 2022 திசெம்பர் 12 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை அந்த உத்தியோகத்தரிற்கு ரூபா 1,218,933 ஆன் சம்பளம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செய்தமை தற்போது சரிசெய்யப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2017 ஆகஸ்ட் 01 திகதி முதல் எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் உள்ளக கணக்காய்வாளராக நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தரிற்கு நியமன அதிகாரியினால் முறையான நியமனக் கடிதம் வழங்கியில்லாததுடன் அத்திகதி முதல் முறையான நியமனக் கடிதம் இன்றி 07 ஆண்டுகளிற்கு அண்டிய காலமாக உள்ளக கணக்காய்வாளராக கடமையாற்றிக் கொண்டு வருகின்றார். | ஏற்றுக் கொள்கிறேன். இந்த நியமனம் தொடர்பாக மேலதிக அறிவுரை வினவி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதென. | சட்ட அறிவுரையை விரைவில் பெற்று முறையாக நடவடிக்கை எடுத்து அதன் முன்னேற்றத்தை கணக்காய்விற்கு அறிக்கையிட வேண்டும். |
| (உ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலக்கம் DMS/E3/34/8/220/1 மற்றும் 2011 ஆகஸ்ட் 03 திகதிய கடிதம் பிரகாரம் கம்பனியின் அங்கீகார ஆளணியினர் 35 ஆவதுடன் 2024 திசெம்பர் 31 திகதி உள்ளவாறான ஆளணி 27 ஆகவிருந்தது. சிரேஷ்ட மட்டத்தின் பதவியொன்றான நிதி முகாமையாளர் பதிவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஒருவரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளதுடன் மூன்றாம் மட்டத்தின் பதவியொன்றான உதவி தோட்ட அத்தியட்சகர் பதவிக்கு ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் கடமையில் ஈடுபடுத்துவதாக அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு திகதிய 2025 செப்டம்பர் 02 திகதி வரை சிரேஷ்ட மட்டத்தில் மற்றும் மூன்றாம் மட்டத்தில் 04 பதவிகளும், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 01 பதவியும் வெற்றிடமாக காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கிறேன். எனினும் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக அங்கீகாரம் கோரி வரிசை அமைச்சின் ஊடாக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதென. | ஆளணி பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு கம்பனியின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்ள ஆளணி வெற்றிடங்களை மாத்திரம் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அங்கீகார ஆட்சேர்ப்பு திட்டம் பிரகாரம் கம்பணிக்கு நிரந்தர பொது முகாமையாளர் ஒருவரை 2012 ஆண்டு முதல் நியமித்திருக்காததுடன் ஒப்பந்த மற்றும் மேவுகை அடிப்படையில் கணக்காய்வு திகதி 2025 செப்டம்பர் 02 திகதி வரை பொது முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | ஏற்றுக் கொள்கிறேன். எனினும் பொது முகாமையாளர் ஒருவரை கம்பனிக்கு ஆட்சேர்ப்பது தொடர்பாக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்று விசாரிக்கப்படுவதால் இந்த ஆட்சேர்பு தொடர்ந்தும் தாமதமாகின்றது. | நீதிமன்ற செயற்பாடுகளை விரைவில நிறைவு செய்து நிரந்தர பொது முகாமையாளர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும். |
| (எ) | 2024 ஆண்டிற்காக தோட்ட ஆளணிக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் அங்கீகார ஆளணி 89 ஆன போதும் உள்ளவாறான ஆளணி 63 ஆனதில் 26 பேர்கள் வெற்றிடமாக காணப்பட்டனர். | ஏற்றுக் கொள்கிறேன். தற்போது வெற்றிடமாகவுள்ள தோட்ட ஆளணி பதவிகளிற்காக உரிய ஆட்சேர்ப்பு கம்பனியின் தேவைப்பாட்டின் மீது மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதென. | தேவைப்பாட்டை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | பெறுந்தோட்ட கம்பனியின் 2024 ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 736,834 பெறுமதியுடைய 08 கொடுப்பனவு வவுசர்கள் காணாமல் போயிருந்ததுடன் இரண்டு வவுசர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். குறித்த கொடுப்பனவு வவுசர்கள் காணாமல் போயுள்ளதால் அது தொடர்பாக மேலும் கண்டறிந்து வருவதென. | முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு குறித்த வவுர்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் பொறுப்பான தரப்பினரிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ ) | 2020 ஜுலை 10 திகதி முதல 2023 ஒக்டோபர் 19 திகதி வரை எல்கடுவ பெறுந்தோட்ட கம்பனியின் தவிசாளர் பதவியில் கடமையாற்றியவரினால் 2020 ஜுலை மாதம் முதல் 2024 செப்டம்பர் மாதம் வரை பயன்படுத்திய வாகனங்களிற்கு எரிபொருள் செலவாக ரூபா 3,010,839 தொகையை மீள்நிரப்பிக் கொண்டிருந்த போதும், அந்த வாகனங்களிற்குரிய ஓட்டக் குறிப்பு அவரினால் பராமரித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். குறித்த காலப்பகுதியினுள் கடமையாற்றிய அந்த தவிசாளரின் எரிபொருள் செலவான ரூபா 3,010,839 வை ஓட்டக் குறிப்பு பராமரிக்காது மீள்நிரப்பு செய்தது தொடர்பாக இலஞ்சம் அல்லது மோசடி குற்றச்சாட்டுகளை புலனாய்வு ஆணைக்கழுவிற்கு முறைபாடொன்றை அனுப்பியுள்ளதென. | முறையான விசாரணையொன்றை நடாத்தி இந்த செயற்பாட்டிற்காக பொறுப்பான தரப்பினரிற்கு ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |